**செய்தி வெளியீடு எண்: 665** **நாள்: 15.09.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.9.2018 அன்று தலைமைச் செயலகத்தில், நிதித்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை ஆகிய துறைகளில் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 215 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையானது மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனை குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக்குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையானது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், வேளாண்மை விரிவாக்க மையங்கள், எடையளவு நிறுவனங்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் போன்ற நிறுவனங்களின் தணிக்கைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேற்கண்ட, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறைகளின் பணிகள் தங்குதடையின்றி செயல்படுத்திட, அத்தணிக்கைத் துறைகளில் காலியாகவுள்ள உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நிதித்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை ஆகிய துறைகளுக்கு 2014–15 மற்றும் 2015–16 ஆகிய ஆண்டுகளுக்கான நேரடி நியமன உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 215 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் இயக்குநர் திரு.பூ. மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**